வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 18**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருண்ஆறுமுகம் | தாலுக்கா | : | மதுரை |
| தகப்பனார் பெயர் | : | செல்வசிதம்பரம் | தொழில் | : | டாக்டர் |
| ஊர் | : | மதுரை | வயது | : | 31/2025 |

**(1 முதல் 3 எதிரி ஆஜர்)**

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 13.03.2025

**அரசு தரப்பில் 18ம் சாட்சி முதல் விசாரணை**

நான் தற்போது பெரியகுளம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.02.2022ம் தேதி இரவு 11.30 மணியளவில் 37 வயது மதிக்கத்தக்க பாண்டியன் மகன் போதுராஜா என்பவர் இறந்த நிலையில் கொண்டு வரப்பட்டார். அவருக்கு வலதுபுற தலையில் காயம் இருந்தது. நான் பிரேதத்தை க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனை செய்வதற்கு அனுப்பி வைத்தேன். நான் வழங்கிய **விபத்து பதிவேடு அசாஆ 11** ஆகும். இறந்த நபரை ராஜன் என்பவர் கொண்டு வந்தார். ராஜன் தண்ணீரில் விழுந்த நபரை எடுக்க சென்றபோது காலில் ஏதோ குத்தி காயம் ஏற்பட்டதாக சொன்னார், அவருக்கு புறநோயாளியாக சிகிச்சை அளித்தேன். இது சம்பந்தமாக நான் பதிவு செய்த **விபத்து பதிவேடு அசாஆ 12** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சிகிச்சை அளித்ததாக சொல்லப்படும் நபரின் பெயரின் ராஜாவா அல்லது

ராஜனா என்றால் ராஜன் என்றுதான் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன். ராஜனுடன் வேறு யாராவது வந்தார்களா என்றால் இல்லை. பிரேதத்தை தேனி அரசு மருத்துவமனைக்கு அனுப்புவதற்கு முன்பு பெரியகுளம் காவல் நிலையத்தில் தகவல் சொன்னேனா என்றால் சொன்னேன். காவல் நிலையத்திலிருந்து போலீசார் வந்தார்களா என்றால் வந்தார்கள். அப்போது மணி இரவு 11 இருக்கும். போதுராஜாவையும், ராஜனையும் போலீசார் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். ராஜனுக்கு சிறிய காயம்தான் ஏற்பட்டிருந்தது. சடலக் கூராய்வு அரங்கு பெரியகுளம் அரசு மருத்துவமனையில் உள்ளதா என்றால் உள்ளது. சடலக் கூராய்வு செய்ய பெரியகுளம் அரசு மருத்துவமனையில் வசதி இருந்தும் ஏன் தேனி அரசு மருத்துவமனைக்கு பிரேதம் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் இங்கு சடலக் கூராய்வு செய்ய Forensic Medicine படித்த மருத்துவ வல்லுநர்கள் இல்லாததால் மாவட்ட தேனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த விவரத்தை எனது விபத்து பதிவேட்டில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், Refer to GTMCH for Expert Opinion என்று எழுதியுள்ளேன். போலீசார் என்னிடம் அன்றைய தேதியில் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் எனது வாக்குமூலத்தில் Expert Opinion பெறுவதற்கு  தேனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மருத்துவமனையில் ராஜன் எவ்வளவு நேரம் இருந்தார் என்றால் சுமார் அரைமணி நேரம் இருந்திருப்பார். 108 ஆம்புலன்சில் பிரேதத்தை ராஜன்தான் கொண்டு வந்தார், வேறு யாராவது வந்தார்களா என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. பெரியகுளம் காவல் நிலையம் அரசு மருத்துவமனையிலிருந்து எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 10 நிமிடங்களில் நடந்துசென்று விடலாம். நான் பிரேதம் வந்து உடனேயே மருத்துவமனை காவலர் அவுட்போஸ்ட்க்கு சொல்லிவிட்டேன். நான் ராஜனை போலீசார் கேட்டுக் கொண்டதால்தான் உள்நோயாளியாக அனுமதிக்காமல் அவருக்கு வெளி நோயாளியாக சிகிச்சை அளித்தேன் என்றால் சரியல்ல. ராஜாவை மருத்துவமனைக்கு போலீசார்தான் கூட்டி வந்தார்கள் என்றாலும், சிகிச்சை முடித்து போலீசார்தான் ராஜாவை அழைத்து சென்றார்கள் என்றாலும் சரியல்ல. இறந்த

போதுராஜாவிற்கு தலையில் வலதுபக்கம் காயம் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது முதல் விசாரணை சாட்சியம் போலீசார் கேட்டுக் கொண்டபடி அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த பிரேதத்தை 108 ஆம்புலன்சில் கொண்டு செல்வது கிடையாது என்றாலும், அமரர் ஊர்தியில்தான் கொண்டு செல்ல வேண்டுமென்றாலும், அது அந்தந்த சூழ்நிலையை பொறுத்தது ஆகும்.

**2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போதுராஜாவிற்கு நான் வழங்கிய விபத்து பதிவேட்டில் ராஜனோ, ராஜாவோ உடன் வந்தார் என்று இல்லை என்றால் சரிதான், ஆனால் 108 ஆம்புலன்சில் பிரேதத்துடன் ராஜன் என்பவர்தான் வந்தார். ராஜன் என்பவருக்கு காயம்பட்டதை போலீசாரிடம் தகவல் தெரிவித்தேனா என்றால் மருத்துவமனை காவலர் அவுட் போஸ்ட்க்கு தகவல் சொன்னேன். ராஜன் என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டில் 12.05 என்பது திருத்தப்பட்டு 12.15 என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2, 3 எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது)**

**மறு விசாரணை** – இல்லை

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
13.03.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 19**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேல்முருகன் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் பெயர் | : | குமரேசன் | தொழில் | : | தலைமை காவலர் |
| ஊர் | : | மீனாட்சிபுரம் | வயது | : | 41/2025 |

<u>(எதிரி ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 13.03.2025

<u>அரசு தரப்பில் 19ம் சாட்சி முதல் விசாரணை</u>

நான் தற்போது ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.02.2022ம் தேதி தென்கரை காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது தென்கரை காவல் நிலைய குற்ற எண் 49/2022 பிரிவு 174 குவிமுச–கீழ் பதிவு செய்த வழக்கில் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி க.விலக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இறந்த போதுராஜா என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்ய மருத்துவருக்கு அடையாளம் காண்பித்து பிரேத பரிசோதனை முடித்து, பிரேதத்தை உறவினர்கள் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன், மறுநாள் 04.02.2022 தேதி பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட உள்ளுறுப்புகளை ஆய்வுக்காக மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>1 முதர் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளரின் வேண்டுதல் கடிதத்தை பெற்ற மருத்துவரின் பெயர் டாக்டர் கணபதி ஆகும். க.விலக்கு அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் நிறைய பிரேதம் இருந்ததா என்றால் இருந்திருக்கலாம், ஞாபகமில்லை. போதுராஜாவின் பிரேதம் சவக்கிடங்கில் எந்த வரிசையில் இருந்தது என்றால் ஞாபகமில்லை. வேண்டுதல் கடிதத்தை எத்தனை மணிக்கு மருத்துவமனையில் கொடுத்தேன் என்று ஆய்வாளரின் விசாரயையில் நான் சொல்லவில்லை. ஆய்வாளர் விசாரணையில் பிரேதத்தில் என்னென்ன அங்க மச்ச அடையாளங்களை காட்டினேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் எனக்கு அதுபற்றி ஞாபகமில்லை. பிரேதத்தில் என்னென்ன உடமைகள் இருந்தது பற்றியும் நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன முறையில் வேண்டுதல் கடிதம் கொடுக்கவில்லை என்றாலும், பிரேதத்தை அடையாளம் காட்டவில்லை என்றாலும் சரியல்ல. நான் மேலதிகாரியின் உத்தரவின்படி போலீசார் சொல்லிக் கொடுத்தபடி அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் சாட்சியம் நம்பத்தகுந்தது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
13.03.2025
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.